மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*

திரு. அ. ராமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெகதலா பேரூராட்சியை குன்னூர் வட்டத்துடன் இணைக்க மறுபரிசீலனை செய்யப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு தங்கள் வாயிலாக நன்றியைக் கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

59—

பேருந்து வசதி

***36680—திரு. வாகை சந்திரசேகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிராட்வே, திருவான்மியூர் மற்றும் கோயம்பேடு பகுதிகளிலிருந்து வேளச்சேரி காந்தி சாலை வரை மீண்டும் பேருந்துகள் இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தற்போது மாநகரப் போக்குவரத்துக் கழகத்தால் வழித்தடம் எண் 18P–ல் காலை 8 மணி அளவில் ஒரு பேருந்து, காந்தி சாலை, வேளச்சேரி மருத்துவமனையிலிருந்து பிராட்வே வரை பொது மக்களது வேண்டுகோளுக்கிணங்க இயக்கப்பட்டு வருகிறது. வழித்தடம் எண் A51–ல் 10 பேருந்துகள், 21L–ல் 4 பேருந்துகள், M7–ல் 8 பேருந்துகள், M70–ல் 21 பேருந்துகள், 570–ல் 52 பேருந்துகள், ஆக மொத்தம், 96 பேருந்துகள் வேளச்சேரி பிரதான சாலை, காந்தி சாலை சந்திப்பு பேருந்து நிறுத்தத்தில் நின்று பயணிகளை ஏற்றி இறக்கி வருகிறது. எனவே, பிராட்வே, திருவான்மியூர் மற்றும் கோயம்பேடு பகுதிகளிலிருந்து வேளச்சேரி பிரதான சாலை, காந்தி சாலை சந்திப்பு பேருந்து நிறுத்தம் வழியாகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருவதால் இவ்வழித்தடப் பேருந்துகளை காந்தி

சாலை வாழ் பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காந்தி சாலையிலிருந்து 18P பேருந்து காலை 8 மணியளவில் புறப்பட்டு பிராட்வேக்கு ஒரே ஒரு முறைதான் செல்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 96 பேருந்துகள் செல்கின்றன என்று சொன்னார்; உண்மை. அவை அனைத்தும் வேளச்சேரி பிரதான சாலையில் உள்ள காந்தி சாலை சந்திப்பில் நின்று செல்கின்றன. காந்தி சாலையின் உட்பகுதியில் உள்ள மக்கள், குறிப்பாக வயதானவர்கள் 2 கி.மீ. தூரம் நடந்து வந்து பேருந்தில் ஏற வேண்டியுள்ளது. பொதுவாக நமது வீடுகளில், உணவு விடுதிகளில் பார்த்தீர்களென்று சொன்னால் Buffet system வைத்திருக்கிறார்கள். Buffet system–ல் அனைத்து items–ம் இருக்கும். ஒரு தட்டை எடுத்துக்கொண்டு நாம் போய் தேவையானதை எடுத்து வைத்துக்கொண்டு சாப்பிடலாம். ஆனால் அங்கே வயதான ஒருவர் எழுந்து போக முடியாமல் உட்கார்ந்தே இருப்பார். அவருக்குத் தேவை ஒரே ஒரு இட்லி, கொஞ்சம் சாம்பார். அதை ஒரு தட்டில் எடுத்துக் கொண்டு போய் அவரது மேசையில் வைத்துவிட்டோம் என்று சொன்னால் அவருக்கு பெரிய மகிழ்ச்சி. அதுபோல்தான், 96 பேருந்துகள் இருக்கின்றன. நல்ல வசதி, எல்லாம் சரிதான். இருந்தாலும், வயதானவர்கள் 2 கி.மீ. தூரம் நடந்து வருவதால் 18P பஸ் சர்வீஸ் காலையிலும், மாலையிலும் வருவதுபோன்று ஒரு மினி பேருந்தும் கொடுத்தால், அது அந்த மக்கள் விரும்புகின்ற ஒன்றாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கூறிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த அந்த காந்தி சாலை என்பது அதிகாரிகள் கொடுத்த புள்ளிவிவரப்படி, 800 மீட்டர் தொலைவுதான் உள்ளது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப்*

2019 பிப்ரவரி 12]

பரிசீலித்து, அது 2 கி.மீ. தூரம் இருக்குமாயின் ஆய்வு செய்து அந்த வழித்தடத்தில் காலையும், மாலையும் கூடுதல் பேருந்துகளை இயக்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வாகை சந்திரசேகர் அவர்கள்.*

முற்பகல் 11–05

திரு. வாகை சந்திரசேகர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இன்னொரு முக்கியமான கோரிக்கை. திருவான்மியூர் பேருந்து நிலையம் மற்றும் திருவான்மியூர் பணிமனை இரண்டும் 2.95 ஏக்கர் நிலப்பரப்பில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. பேருந்து நிலையம் 1979 ஆம் ஆண்டு துவங்கப்பட்டிருக்கின்றது. பணிமனை 1981 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டிருக்கின்றது. 40 ஆண்டுக்காலமாக திருவான்மியூர் பேருந்து நிலையம் இயங்கி வருகின்றது. அங்கே மக்கள் பெருக்கம் உள்ளதால், சாலை உயர்த்தப்பட்டிருக்கின்றது. ஆனால், திருவான்மியூர் பேருந்து நிலையம் அப்படியே இருப்பதனால், 4 அடி பள்ளத்திலே இருக்கின்றது. மழைக் காலத்தில் தண்ணீர் நிறைந்து விடுகிறது. திருவான்மியூர் பேருந்து நிலையத்திற்கு ஒரு நாளைக்கு 360 பேருந்துகள் வந்து செல்கின்றன. ஒவ்வொரு பேருந்தும் 3 முறை 4 முறை என, மொத்தத்தில் 1,200 முறை வந்து செல்கின்றன. திருவான்மியூர் பேருந்து நிலையத்தினைச் சுற்றி இருக்கின்ற* compound wall *இடிக்கப்பட்டிருக்கிறது. ஒரு முறை, ஒரு வயதான பெண்மணி பேருந்தைப் பிடிப்பதற்காக குறுக்கு வழியாக வருகின்றபொழுது தவறி விழுந்து படுகாயமுற்றார். கழிப்பிட வசதி இல்லை. மேலும், திருவான்மியூர் பேருந்து நிலையத்தில் நுழைந்தாலே ஒரே துர்நாற்றமாக இருக்கிறது. அது கிழக்குக் கடற்கரைச் சாலையினுடைய முகப்பாகவும் இருக்கிறது.*

திருவான்மியூரிலிருந்து சென்னை நகரம் முழுவதும் இருக்கின்ற ஊர்களுக்கெல்லாம் நிறைய பேருந்துகள் செல்கின்றன. இதனால் திருவான்மியூர் மட்டுமல்ல, வேளச்சேரி தொகுதி மட்டுமல்ல, சென்னை நகரத்தில் வாழ்கின்ற மக்களே மகிழ்ச்சி அடைவார்கள் என்ற காரணத்தினால், அந்த compound wall*–ஐ சரி செய்ய வேண்டுமென்றும், 4 அடி பள்ளத்தை உயர்த்த வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.*

[2019 பிப்ரவரி 12

இன்னொன்று, விமான நிலையத்திலே தாய்மார்கள் தங்கள் குழந்தைகளைப் பராமரிக்க, தாய்ப்பாலூட்ட தனியறை உண்டு. அதுபோல, பேருந்து நிலையங்களில் தாய்மார்கள், அவர்கள் குழந்தைகளோடு தனிமையாக இருந்து அந்தக் குழந்தைகளைப் பராமரிப்பதற்கு ஒரு தனி அறை கட்ட வேண்டுமென்பது மக்களுடைய முக்கியமான நீண்டநாள் கோரிக்கை. ஆகவே, 40 ஆண்டுக் காலமாக பழுதடைந்துள்ள திருவான்மியூர் பேருந்து நிலையத்தைப் புதுப்பித்து நவீனப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கின்ற திருவான்மியூர் பேருந்து நிலையத்தை, 2011–ல்* PPP model*–ல் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. திருவான்மியூர் பேருந்து நிலையம் இருந்த இடத்தில் நெடுஞ்சாலைத் துறையால் மேம்பாலம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதால் அப்பணி நிறுத்தப்பட்டது. இந்நிலையில் தற்பொழுது தாக்கல் செய்யப்பட்ட* budget*–ல் அறிவிக்கப்பட்ட* TNIFMC *திட்டத்தின் மூலமாக அந்தப் பேருந்து நிலையத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல தாய்மார்களுக்கு தனியறை வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். பேருந்து நிலையங்களிலே தாய்மார்களுக்கென்று பாலூட்டும் அறையை ஏற்படுத்திக் கொடுத்த முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அந்தப் பேருந்து நிலையத்தில் அதுபோன்று வசதி இல்லாமல் இருந்தால் அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 60, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன். சரஸ்வதி, மாண்புமிகு கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியத் துறை அமைச்சர் அவர்கள்.*